# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தம்)

***2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2013, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

---

*(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***216 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : 5.00**

*சட்டப்பயன் பற்றிய கூற்று*

***வாசகம் 2*** : *இவ்வாசகம், 2011ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, இணையச் சேவைகள் மற்றும் தொலைத்தொடர்புச் சேவைகளை வழங்குவதற்காகத் தனிவேறான வீதங்களை வழங்குவதுமாகும்.*

***வாசகம் 3*** : *இவ்வாசகம், 2011ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தொலைத்தொடர்புச் சேவைகளின் வரைவிலக்கணத்தில் இணையச் சேவைகளை உள்ளடக்குவதுடன், இணையச் சேவைகளுக்கான புதிய வரைவிலக்கணமொன்றை உள்ளடக்குவதுமாகும்.*

## தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தம்)

ச.வ.ஓ. 10/2013

### 2011ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

**1.** இச்சட்டம், 2013ஆண்டின் ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2013, சனவரி 1ஆந்தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*2011 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தொலைத் தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2011ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவு, ''2011, சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் காலப்பகுதிக்கு இயக்குநரினால் அளிக்கப்படும் தொலைத்தொடர்பு சேவைகளின் வழங்கலின் பெறுமதியின் மீது ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அத்தகைய தொலைத்தொடர்பு சேவைகள் கிடைக்கப்பெறுவதன் மீது 20 சதவீதப்படி தொலைத்தொடர்பு அறவீடு என அழைக்கப்படும் அறவீடொன்று தொலைத்தொடர்பு சேவையைப் பெறும் ஒவ்வோராளிடமிருந்தும் (இதனகத்துப்பின்னர் ''பெறுநர்'' என அழைக்கப்படுபவர்) அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்.'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக,

''தொலைத்தொடர்பு அறவீடு'' என அழைக்கப்படும் அறவீடொன்று தொலைத்தொடர்பு சேவையைப் பெறும் ஒவ்வோராளிடமிருந்தும் (இதனகத்துப்பின்னர் ''பெறுநர்'' என அழைக்கப்படுபவர்)அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்:

(அ) 2011, சனவரி 1ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2013, சனவரி 1ஆந்தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்காக, இருபது சதவீதத்தில்;

(ஆ) 2013, சனவரி 1ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக

(i) இணையச் சேவைகளின் வழங்குதலின் பெறுமதியின் மீது, பத்து சதவீதத்தில்; அத்துடன்

(ii) இணையச் சேவைகளின் வழங்குதல் தவிர்ந்த தொலைத்தொடர்புச் சேவைகளின் வழங்குதலின் பெறுமதியின் மீது இருபது சதவீதத்தில்.

ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அத்தகைய தொலைத் தொடர்புச் சேவை கிடைக்கப்பெறுவதன்மீது, இயக்குநரினால் அத்தகைய சேவைகளின் வழங்குதலின் பெறுமதியின்மீது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "தொலைத்தொடர்புச் சேவை" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"தொலைத்தொடர்புச் சேவை"என்பது, 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தொலைத்தொடர்பு மற்றும் வேறு இயக்குநர்களினால் இறுதி ஒப்பப்பணம் செலுத்துநர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் என்று பொருளாகுமென்பதுடன், இணையச் சேவைகளையும் உள்ளடக்கும் ; ஆனால் உள்ளூர் இயக்குநர்களுக்கும், சர்வதேசக் குடியேற்றத்திற்குமிடையிலும் உள்ளூர் இயக்குநர்களுக்கும் கடல்கடந்த தொலைத் தொடர்புக் குடியேற்றங்களுக்கும் உள்ளூர் இயக்குநர்களுக்கும் கடல் கடந்த தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கும் 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் IIIஇன் 21ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் மேவப்பட்ட சர்வதேசத் தொலைத்தொடர்புச் சேவைக்குமிடையிலும் இடைத்தொடர்புச் சேவைகளையும் அணுக்கச் சேவைகளையும் உள்ளடக்கமாட்டாது.";

(2) "இடைத்தொடர்புச் சேவை" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"இணையச் சேவைகள்" என்பது, குறுகிய பான்ட், பரந்த பான்ட் அல்லது அர்ப்பணிக்கப்பட்ட இணைய அணுகுகை என்பனவகையாக இணையத்தை வழங்குதல் என்று பொருளாகும்.

**4**. 2013, சனவரி 1ஆந்தேதியிலிருந்து தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின்போது, எவரேனும் பாவனையாளரிடமிருந்து எவரேனும் இயக்குநர் அறவீட்டுத்தொகையை விதித்து சேகரிக்குமிடத்து, அத்தகைய அறவீடு எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியான முறையில் விதித்து அறவிடப்பட்டுள்ளதாகவும், விதித்து அறவிடப்படுகின்றதாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இயக்குநர், அத்தகைய அறவீட்டைச் சேகரித்தல் தொடர்பில், ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கிற்கெதிராக இத்தால் நட்டோத்தரவாதம் அளிக்கவும் படுகின்றார். நட்டோத்தர வாதம்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்